**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை –21.09.2016

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### வானிலை முன்னறிவிப்புமற்றும் அறிவுரைகள் (21.09.2016 முதல் 25.09.2016)

#### 1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களுக்கும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 61 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்

**வேளாண் அறிவுரை**

- எதிர்பார்க்கபடும் மழையை பயன்படுத்தி 120 நாட்களான இறவை மஞ்சளுக்கு மேலுரமாக ஒரு ஹெக்டருக்கு 25 கிலோ தழைச்சத்து மற்றும் 18 கிலோ சாம்பல்சத்து இடவும்.
- நிலத்தடி நீர் குறைவாக காணப்படுவதாலும் ஆற்றில் குறைவான தண்ணீர் எதிர்பார்க்கபடுவதாலும், சம்பா நெல் பயிருக்கு கீழ்கண்ட நான்கு முறைகளை அனுசரிக்கவும்
  i.மத்திய கால வயதுடைய நெல் இரகங்களை தேர்வு செய்து விதைக்கவும்.
  ii. நேரடி விதைப்பு மூலமாகவோ (அ) நாற்று தயார் பண்ணி நடவு செய்யலாம்.
  iii.பயிர் முளைத்த மூன்றாம் நாள் (அ) நட்ட மூன்றாம் நாள் ஒரு எக்டருக்கு 1.25 கிலோ பூட்டாகுளோர் களைக் கொல்லியை 50 கிலோ மணலுடன் கலந்து தூவவும். தண்ணீர் வடிக்கக் கூடாது.
  iv. நெல் பயிருக்கு மாற்று முறையாக நீர் மறைய நீர் கட்டுதல் முறையை கடைபிடிக்கவும்.
- தற்போது காணப்படும் வானிலையால் பால் சுறக்கும் மாடுகளுக்கு, காளை மாடுகளுக்கும் கோமாரி நோய் வர வாய்ப்புள்ளது. எனவே, கால்நடை ஆஸ்பத்திரிக்கு மாடுகளை அழைத்து சென்று தடுப்பூசி போடவும்.

#### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடனும் காணப்படும். இலேசானமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 35°செ முதல் 38°செ ஆகவும்,குறைந்தபட்ச வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின்

ஈரப்பதம் 42 முதல் 74சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.சராசரியாககாற்றின் வேகம் 7கி.மீ முதல் 19 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள குறுவை நெல்லினை தக்க பாதுகாப்புடன் அறுவடை செய்யவும்.

- ✓ பின் சம்பா , தாளடி பருவத்திற்கு ஆடுதுறை 38, ஆடுதுறை 46, ஆடுதுறை 49, வெள்ளை பொன்னி, திருச்சி 3, மற்றும் டிகேஎம் 13 இரகங்களும் சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது.

- ➢ காவேரி நீர் தற்போது திறந்து விட்டிருக்கும்படியால், சம்பா நெல் பயிருக்கு கீழ்கண்ட நான்கு முறைகளைஅனுசரிக்கவும்

  i.மத்திய கால வயதுடைய நெல் இரகங்களை தேர்வு செய்து விதைக்கவும்.

  ii. நேரடி விதைப்பு மூலமாகவோ (அ) நாற்று தயார் பண்ணி நடவு செய்யலாம்.

  iii.பயிர் முளைத்த மூன்றாம் நாள் (அ) நட்ட மூன்றாம் நாள் ஒரு எக்டருக்கு 1.25 கிலோ பூட்டாகுளோர் களைக் கொல்லியை 50 கிலோ மணலுடன் கலந்து தூவவும். தண்ணீர் வடிக்கக் கூடாது.

  iv. நெல் பயிருக்கு மாற்று முறையாக நீர் மறைய நீர் கட்டுதல் முறையை கடைபிடிக்கவும்.

- ✓

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 37°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 44 முதல் 69 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 முதல் 24 கி.மீவேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வாழைத்தோட்டத்தில் அவ்வப்போது காய்ந்த வாழையில் தண்டுத்துளைக்கும் வண்டின் தாக்குதல் தென்படுகிறது. இவ்வண்டினை கட்டுப்படுத்த வாழைத்தோட்டத்தில் அவ்வப்போது காய்ந்த இலைகளையும் சருகுகளையும் அப்புறப்படுத்தி தூய்மையாக வைக்க வேண்டும். பக்கக்கன்றுகளை அதிகம் வளர விடாமல் வெட்டி அகற்றவேண்டும். வண்டு தாக்கிய மரங்களை சிறு துண்டுகளாக வெட்டி உலரவைத்து பின்பு தீயிட்டு அழிக்க வேண்டும். மோனோகுரோட்டோபாஸ் 1.50 மில்லியுடன் 350 மில்லி தண்ணீரை எடுத்துக்கொள்ளவேண்டும். இம்மருந்து கரைசலைத் தண்டின் அடிப்பாகத்தில் 60 செ.மீ. உயரத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வடிவமைத்துள்ள சாய்வாகக் கீழே நோக்கி தண்டினுள் ஆழமாகச் செலுத்த வேண்டும். இதே போன்று வாழைத்தண்டில் 150 செ.மீ. உயரத்தில், கீழே செலுத்திய பக்கத்திற்கு எதிர்புறத்தில் மேலும் 2 மில்லி செலுத்த வேண்டும். மொத்தமாக ஒரு மரத்திற்கு 4 மில்லி அளவு மருந்து செலுத்த வேண்டும்.மரத்தின் 5வது மாதம் முதல் 8வது மாதம் வரை ஒவ்வொரு மாதமும் இந்த ஊசி மூலம் பூச்சிக்கொல்லி மருந்து போடுவதன் மூலம் வண்டின் தாக்குதலை தவிர்க்க முடியும்.

- ✓ மானாவாரி நிலங்களை நன்கு உழுது புழுதியாக்கி, புழுதியில் சோளம் மற்றும் பருத்தியை 5 செ.மீ ஆழத்தில் மழையை எதிர் பார்த்து விதைப்பு செய்யும். இவ்வாறு விதைக்கப்பட்ட விதைகள் 10 நாட்களுள் எதிர்பார்க்கப்படும் உழவு மழையினால் நன்றாக முளைத்து வரும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம்இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது 25°செ முதல 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 42 முதல் 78 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 6 முதல் 19 கி.மீ வரை வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வாழைத்தோட்டத்தில் அவ்வப்போது காய்ந்த வாழையில் தண்டுத்துளைக்கும் வண்டின் தாக்குதல் தென்படுகிறது. இவ்வண்டினை கட்டுப்படுத்த வாழைத்தோட்டத்தில் அவ்வப்போது காய்ந்த இலைகளையும் சருகுகளையும் அப்புறப்படுத்தி தூய்மையாக வைக்க வேண்டும். பக்கக்கன்றுகளை அதிகம் வளர விடாமல் வெட்டி அகற்றவேண்டும். வண்டு தாக்கிய மரங்களை சிறு துண்டுகளாக வெட்டி உலரவைத்து பின்பு தீயிட்டு அழிக்க வேண்டும். மோனோகுரோட்டோபாஸ் 1.50 மில்லியுடன் 350 மில்லி தண்ணீரை எடுத்துக்கொள்ளவேண்டும். இம்மருந்து கரைசலைத் தண்டின் அடிப்பாகத்தில் 60 செ.மீ. உயரத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வடிவமைத்துள்ள சாய்வாகக் கீழே நோக்கி தண்டினுள் ஆழமாகச் செலுத்த வேண்டும். இதே போன்று வாழைத்தண்டில் 150 செ.மீ. உயரத்தில், கீழே செலுத்திய பக்கத்திற்கு எதிர்புறத்தில் மேலும் 2 மில்லி செலுத்த வேண்டும். மொத்தமாக ஒரு மரத்திற்கு 4 மில்லி அளவு மருந்து செலுத்த வேண்டும்.மரத்தின் 5வது மாதம் முதல் 8வது மாதம் வரை ஒவ்வொரு மாதமும் இந்த ஊசி மூலம் பூச்சிக்கொல்லி மருந்து போடுவதன் மூலம் வண்டின் தாக்குதலை தவிர்க்க முடியும்.
- ✓ தொடர்ந்து வறண்ட வானிலை நிலவுவதால் ஒரு தென்னை மரத்திற்கு நாள்தொறும் 100 லிட்டர் தண்ணீரை சொட்டு நீர் பாசன முறையில் நீர் பாசனம் செய்யவும்.
- ✓ மழைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி போடவும்.
- ✓ 30 நாட்கள் வயதுடைய இறவை மக்கா சோளத்திற்கு அதிக வெப்பநிலை காணப்படுவதால் சாறு உறிஞ்சும் பூச்சிகள் வர வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி மோனோக்ரோடோபாஸ் மருந்து கலந்து தெளிக்கவும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம்மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 18° செ முதல் 19° செஆகவும்,இரவுநேர வெப்பநிலை 8° முதல் 9° செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

காற்றின் ஈரப்பதம் 82 முதல் 94 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 17கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ கூடலூர் பகுதியில், ஒரு பாக்கு மரத்திற்கு, 220 கிராம் யூரியா, 220 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 230 கிராம் பொட்டாஸ் உரம் இடலாம்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும்.இலேசான மழை பெற வாய்ப்புள்ளது. பகல்நேர வெப்பநிலை 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 76 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.காற்று மணிக்கு 10 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மானாவாரியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை, பாசிப்பயறு, உளுந்து மற்றும் துவரை பயிர்களை வறட்சியிலிருந்து காத்திட 0.5% பொட்டாசியம் குளோரைடு கரைசலை (ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம்) இலைகள் மீது தெளிப்பதன் மூலம் இலைத் துளைகள் மூடப்பட்டு பயிர்களிலிருந்து நீர் ஆவியாவது தடுக்கப்படுவதால் பயிர்கள் வறட்சியிலிருந்து காக்கப்படுகிறது. இதனை போதிய மண் ஈரம் இருக்கும்போது செய்யவும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான மழை பெற வாய்ப்புள்ளது. பகல்நேர வெப்பநிலை34°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல்26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 52 மற்றும் 89 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4கி.மீ முதல் 7கி.மீவரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ சம்பா நெல் நாற்றாங்காலில் களைகளைக் கட்டுப்படுத்த விதைத்த மூன்றாம் நாள் ஹெக்டருக்கு 300 கிராம் பிரிடில்லாகளோர் + சேஃப்பனர் என்ற களைக்கொல்லியை தெளிக்கவும். களைக்கொல்லியை தெளிப்பதற்கு முன்பாக கண்ணாடி அளவு நீர் நிறுத்தி வடிக்கட்டாமல் பார்த்துக்கொள்ளவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும்மேகமூட்டத்துடன் காணப்படும். மழைஎதிர்பார்க்கப்படவில்லை பகல்நேர வெப்பநிலை 33° செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை

25°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 66 முதல் 76 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 27 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அன்னாசி வயல்களில் மூடாக்கு இடுவதன் மூலம் மண்ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.
- ✓ வாழையில் காய்ந்த மற்றும் நோய் தாக்கிய இலைகளை அகற்றி எரிப்பதன் மூலம் இலைப்புள்ளி நோய் பரவுதலை கட்டுப்படுத்தலாம்.
- ✓ எதிர் வரும் 5 நாட்களில் அதிக வெப்ப நிலையும், குறைந்த ஈரப்பதமும் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் தாவரங்களிலுள்ள நீர் ஆவியாகுதல் மூலம் சேதமாகும் வாய்ப்பு உள்ளது. எனவே இருக்கும் ஈரப்பதம் வீணாகாமல் இருக்க எல்லா வகை பயிர்களுக்கும் கூடியமானவரை நீர்ப்பாய்ச்சவும்.
- ✓ சொட்டு நீர் பாசன முறையில் கிராம்பு வளர்ப்பவர்கள் வறட்சியில் இருந்து பாதுகாக்க தினமும் ஒரு செடிக்கு 8 லிட்டர் நீர் பாய்ச்சவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**
**த.நா.வே.ப.கழகம்,கோவை.**